
# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

7-8-66

விலை 20 காசு



# கேள்வி--பதில்!

1. காஷ்மீர் பிரச்சினை பற்றிய பேச்சை எழுப்பக் கூடாது என்று பிடிவாதம் பேசி வந்த இந்தியப் பேரரசு, காஷ்மீர் பிரச்சினை உட்பட எந்தப் பிரச்சினையையும் பேசச் சம்மதம் தெரிவித்திருப்பது பற்றி என்ன கருதுகிறீர்?

*மிரட்டியே காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணும் பாகிஸ்தானுக்கு இது ஒரு வகையிலே வெற்றி என்றே கூறலாம். காஷ்மீர் இந்தியாவில் ஒரு பகுதி என்கிறபோது, வேருேர் நாட்டுடன் காஷ்மீர்பற்றிப் பேச வேண்டிய அவசியமே இல்லை. ஏனே இப்போது இந்தியப் பேரரசு ஒரு படி கீழே இறங்குகிறது! ஆனல் இப்போதும் காஷ்மீர் பற்றிய பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கூறும் போது, அந்நாடு பிடித்துவைத்துக்கொண்டிருக்கும் காஷ்மீர் பகுதியை எப்போது திருப்பித் தரப்போகிறீர்கள் என்று கேட்டு பாகிஸ்தானையே மடக்கலாம்; ராஜதந்திர முனையில் நேர்த்தியான திறமை இருந்தால்.*

2. சுதந்திரக் கட்சிக்கும் தி. மு. கழகத்துக்கும் ஏற்பட்டுள்ள தொகுதி உடன்பாடு, கொள்கை அடிப்படையில் அல்ல என்று மசானி கூறியிருப்பது பற்றித் தங்கள் கருத்து என்ன?

*பெருந்தன்மையுடன் உண்மை நிலைமையை மசானி எடுத்துக் கூறி இருக்கிருர்.*

3. நாம் எவ்வளவோ பண்புடன் பேசிக்கொண்டு வருவதைக் கேட்ட பிறகும், கழகத்தவரைச் சிலர் இன்னமும் கேவலமாகத் தாக்கிப் பேசுகிருர்களே ஏன்?

*நல்ல கேள்வி கேட்கிறீர்கள் ஐயா! மலம் ஏன் நாற்றம் அடிக்கிறது என்பதுபோன்ற கேள்வி.*

4. நான் எந்தக் கட்சியிலும் சேரமாட்டேன் என்று சிலர் பேசுவது ஏன்?

*எந்தக் கட்சிக்கும் தாங்கள் இலாயக்கில்லை என்ற உள்ளுணர்வு காரணமாக இருக்கலாம்.*

5. பொறுமை பலனளிக்கும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு, அரசியல் உலகிலே இருக்கிறதா?

*ஏன் இல்லை. டாக்டர் சுகார்ணேவின் தாக்குதல் பற்றித் துளியும் பதருமல் பொறுமையுடன் இருந்துவந்த மலாசியப் பிரதமர் துங்கு அப்துல்ரகிமான் அவர்கள் போதாதா பொறுமை பலனளிக்கும் என்பதை எடுத்துக்காட்ட.*

6. உண்மையான வீரனுக்கும், வெறும் ஆவேசக்காரனுக்கும் என்ன வித்தியாசம்?

*புலிக்கும் புலிவேஷக்காரனுக்கும் உள்ள வித்தியாசந்தான்!*

7. டில்லி சர்க்காரில், பக்தவத்சலனரின் செல்வாக்குப் பலமாகிவிட்டிருக்கிறதாமே, உண்மையா?

*கேள்விப்பட்டிருக்கிறேன் நானும். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது பட்டாளத்தை ஏவினர் அல்லவா அப்போதே சபாஷ் பட்டம் கிடைத்ததே! கற்பாறை போல அசைந்து கொடுக்காமல் உறுதியாக நின்றிருக்கிருர் என்று உள்துறை அமைச்சர் நந்தா பாராட்டிப் பேசினரே!*

8. இந்திராகாந்தி அம்மையார் சென்னை வந்தபோது காமராஜர் உடன் இல்லாதது பற்றி யாருக்காவது மகிழ்ச்சி இருந்திருக்குமா?

*வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருந்திருக்கமாட்டார்கள் ஆனல் அன்றையத்தினம் காமராஜர் இருந்திருந்தால், பக்தவத்சலனருக்கு இவ்வளவு வெளிச்சம் கிடைத்திருக்குமா? நல்ல வேளையாகக் காமராஜர் வரவில்லை, நம்ம முதலமைச்சர் கொலு இருக்க முடிந்தது என்று பக்தவத்சலனரின் அன்பர்கள் மகிழ்ந்திருக்கக்கூடும்.*

9. முதலமைச்சர் பக்தவத்சலனர் சினனட்களுக்கு முன்பு நாதஸ்வர பள்ளிக்கூடத்தைத் துவக்கி வைத்தாராமே; வாத்திய இசையிலே அவருக்குப் பழக்கம் உண்டா?

*யார் முதலமைச்சராக வந்தாலும் 'ஒத்து' ஊதிப் பழக்கமும், டில்லிப் பேரரசு சொல்வதற்கெல்லாம் தாளம் போட்ட பயிற்சியும், உண்டு என்பதை மறைமுகமாகக் குத்திக் காட்டுகிறீரா?*

10. வளவளவென்று பேசாதே, காங்கிரஸ ஆட்சியாளர்பற்றிய உன் கருத்தை இரண்டே வாக்கியங்களில் சொல்லிமுடி என்று கேட்கிருர் என் நண்பர் ஒருவர், என்ன சொல்வது?

*தொட்டது துலங்கவில்லை. தொடாதது பாக்கியில்லை.*

11. நாலுபேரிடம் கைநீட்டிப் பிழைக்க விருப்பமில்லை; நாலு பேர் என்னிடம் கை நீட்டும்படியான வேலை ஒன்று வேண்டும் என்கிருன் என் நண்பன், என்ன வேலைக்குப் போகச்சொல்லலாம்?

*மரத்தடி ஜோதிடர் வேலைக்கு அனுப்புங்கள்!*

12. அரிசி மட்டுந்தான உணவு? வேறு பல பண்டங்களைச் சாப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் அரிசிப் பஞ்சம் போகும் என்று காங்கிரசார் பேசுவது கேட்டால் என்ன தோன்றுகிறது?

*கல்லைத்தான் மண்ணைத்தான்*
*காய்ச்சித்தான் குடிக்கத்தான்*
*கற்றுக் கொடுக்கத்தான்*
*கூடாதா காங்கிரேசா!*
*-என்று பாடத் தோன்றுகிறது.*

13. வி. கே. கிருஷ்ணமேனன் காமராஜருடைய நெருங்கிய நண்பராமே அப்படியா?

*நெருங்கிய நண்பராக இருந்தார்! முன்பு! டில்லி மந்திரியாக இருந்தபோது!!*

14. ஆந்திராவில் பிரம்மானந்த ரெட்டியார் கோஷ்டிக்கும் சஞ்சீவ ரெட்டியார் கோஷ்டிக்கும் சண்டையாமே; இதிலே காமராஜர் எந்தப்பக்கம் சேருவார்?

*வலுத்த கட்சியின் பக்கம் சேர்ந்து விடுவதுதான் அவர் வாடிக்கை.*

(13-ம் பக்கம் பார்க்க)

**வெற்றி வழி!**

முறையான சிந்தனையினால் வெற்றி எய்தப்பெறுகிறது. கண்ணுறங்காத கவனத்தினால் அது காப்பாற்றப்படுகிறது. வெற்றிகிட்டும் தருணத்தில் பலருக்கு உறுதி குலைகிறது. திரும்பவும் தோல்வியில் வீழ்ந்துவிடுகிறார்கள். விரிவான சிந்தனை, திடமான உள்ளம், துவளாத வன்மை இவைகளே வெற்றி வழியில் நடத்திச் செல்வன

-ஜேம்ஸ் ஆலன்.

காஞ்சி

மலர் 3 7—8—66 இதழ் 2

# பெருமை பெறப்போகிறது!

"பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகும் ஒட்டிய வயிற்றோடு, 'உணவு கிடைக்குமா?' என்று தவிக்கும் பாட்டாளி அமைச்சரின் முகத்தைப் பார்க்கிறான்; அமைச்சரோ அமெரிக்கத் தலைவர் ஜான்சனைப் பார்க்கிறார்; ஜான்சனோ இந்திய ரூபாயின் மதிப்பைப் பார்க்கிறார்."

"ஆகவே, இவர்களைத் தொடர்ந்து ஆள விட்டதால் மதிப்புக் குறைந்தது ரூபாயில்; மானங் குறைந்தது உடலில்; வண்மை குறைந்தது நாட்டில்! மிச்சம் என்ன இருக்கிறது?"

—திரும்பத் திரும்பப் படித்துப் பாருங்கள்; ஒரு உண்மை பளிச்சென புரியும்! இந்திய நாட்டைப் பிடித்துள்ள நோய், எப்படி எப்படித் தொற்றி வருகிறது என்ற தத்துவம் புரியும்.

கடந்த கிழமை சிவகெங்கையிலே நடைபெற்று முடிந்த முகவை மாவட்ட மாநாட்டிலே, மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் வழக்கறிஞரும், கவிஞருமான **வேழவேந்தன்** மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் கருத்தாழம் மிக்க நீண்ட உரைக்கிடையே,

"அந்த நாள் பொற்காலத்தமிழர் ஆட்சியில், இதே தொண்டியிலும், முசிறியிலும், புகாரிலும் யவன நாட்டுக் கப்பல்கள் வந்து, நம் நாட்டு அரிசிக்காகக் காத்து நின்றன; ஆனால் இன்று? இன்றும் நிற்கின்றன; உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொண்டு."

—என்று காட்டிய எடுத்துக் காட்டு, தமிழர் ஆட்சிக்கும், தகாதவர் ஆட்சிக்கும் சிறந்ததோர் எடுத்துக் காட்டு என்பது கைக்கரி.

"கழகம் ஆட்சிக்கு வந்தால், 5 ஏகருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு வரி இல்லை என்று சட்டம் கொண்டுவரும்; தமிழக அரசின் ரூ. 150 கோடி வருவாயில் ரூ. ஏழரைக் கோடிதான் நிலவரி; நிலவரியை நீக்குவதன் மூலம் ரூ. நாலரை அல்லது 5 கோடிதான் இழப்பு ஏற்படும்; இந்த இழப்பை ஈடு செய்ய இலாபம் தரும் தொழில்களைத் தேசியமயமாக்கும்."

—என்ற **நாவலரின்** பேச்சு, கழகத்தின் தேர்தல் திட்டம் என்ன? என்று வாய்ப்பறையடிப்போரின் வெற்றுவாயை மூடச் செய்யும்; கழகத்தின் பல திட்டங்களில் இதுவும் ஒன்று.

நாவலரின் பேச்சிலே காணப்பட்ட பொருளாதாரப் புள்ளி விவரங்களும், இந்திய—தமிழக அரசின் மறுக்க வியலாத குறைபாடுகளும் தமிழக மக்களின் நீங்காத நினைவில் நின்று நிழலாடித் தீரவேண்டிய ஒன்று என்பது மிகைப்பட்டதல்ல!

"காங்கிரசை முறியடிப்பதற்காகத்தான் தி. மு. க. - வை வெற்றி பெறச் செய்யவேண்டும்; மாறாக, கழகம், ஆட்சியைப் பிடிப்பதற்காகக் காங்கிரசு முறியடிக்கப்பட வேண்டும் என்பது பொருளல்ல."

—என்ற **பேராசிரியரின்** கருத்துரையில், பொதிந்துள்ள அரசியல் பெருநோக்கை, வருங்கால எதிர்க்கட்சியாக இருக்கப்போகிற காங்கிரசுக் கட்சிப் புரிந்து கொண்டாக வேண்டும்!

"புரட்சிக்கனல் எழுந்தால் தவிர, பலாத்காரக் காற்றுப் பரவினால் அல்லாமல், இரத்தம் கொட்டினால் அன்றி காரியம் நடைபெறாது என்ற எண்ணம் படைத்த முகவை மாவட்டத்து மக்களை, அறவழியில்—அமைதி வழியில் நடத்திச்செல்வது தி. மு. கழகமே"

—என்று வரவேற்புக்குழுத் தலைவர் **தென்னரசு** பேசியது முகவை மாவட்டத்துக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்துக்கும்—சிறப்பாகத் தமிழகத்துக்கும் பொருந்தும். மத்திய—மாநில அரசுகளில் நச்சு நோக்கங்கள் எப்படியெப்படி யெல்லாம் செயல்படத் தொடங்கிவிட்டன என்பதற்கோர் எழிலார்ந்த படப்பிடிப்பு! அரசினர் உணர்ந்து அகற்றிக்கொள்ளவேண்டிய பண்பு!!

மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திய **மன்னை நாராயணசாமி** முகவை மாவட்டத்துத் தேய்வையும், காமராசரது வளர்ச்சியையும் ஒப்பிட்டுக்காட்டி—உரிய காரணங்கள், காங்கிரசின் சர்வாதிகாரத் தன்மையுடன் ஐக்கியப்பட்டுள்ள போக்கு இதனைச் சாடினார் என்றால், அது அரசுக்கட்டிலேறி இருப்போரின் அகந்தை—அழிக்கப்படவிருக்கிறது என்பதற்கு ஒரு முன்னோட்டமேயாகும்!

"கடந்த காலத்தில் மக்கள் செய்த பெருந்தவறுதான், இன்றைய காங்கிரசுக் கட்சியின் கொடுங்கோன்மைக்குக் காரணம்" என்ற **புரட்சி நடிகரின்** பேச்சிலே காணப்பட்ட 'இனியும் மக்கள் தவறிழைக்கக்கூடாது; காங்கிரசை ஆட்சிபீட மேறவைத்து, அல்லலுக்கு ஆட்படக்கூடாது' என்ற எச்சரிக்கை, மக்களுக்கு மட்டுமல்ல — ஆளவந்தார்களுக்கும்கூடத்தான்.

"ஆங்கிலேயனை வெளியேற்றிவிட்டோம் என்று கூறுபவர்களே! மானமிருக்கு

மானால் சொல்லுங்கள் — அடிமைத்தனம் நீக்கப்பட்டுவிட்டதா? உழைப்பின் பயன் உரியவர்க்குக் கிடைத்திருக்கிறதா?"

—என்று கேட்டு, சீரான விளக்கங்கள் தந்து, ஆங்கிலேயர்களுடன் வணிகத்துறையில் மட்டும் இந்தியா எத்தகைய தொடர்பு கொண்டுள்ளது என்று **பொருளாளர் கருணாநிதி** கொடுத்த புள்ளிவிவரங்கள்-லட்சம், லட்சமாகவும் கோடி கோடியாகவும் காங்கிரசுக்குத் தேர்தல் நிதி கொடுக்கின்ற பணக்காரர்களும், வணிக நிலைய மூலகர்த்தாக்களும் சிந்திக்கவேண்டிய ஒன்று.

'தி. மு. க.வுக்கு ஆளும் தகுதி உண்டா? என்று கேட்டுவிட்டு, நெஞ்சு நிமிர்த்தி நின்று, உடனே கூனிக்குறுகி, ஓரக்கண்ணால் பார்ப்பவர்களுக்கு, **என். வி. நடராசன்** தந்த பதில் நினைவு கூறத்தக்கது.

மொத்தத்தில், நடைபெற்றுக்கொண்டிருக்கிற காங்கிரஸ் சர்வாதிகார வெறித்தனத்தைச் சரித்துச் சாய்த்தாலல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்துக்கும் குறிப்பாகத் தமிழகத்துக்கும் விடிவு இல்லை; நல்வாழ்வில்லை என்பதற்கு நல்ல பல விளக்கங்கள் சிவகெங்கை மாநாட்டில் தலைவர்களால் கொடுக்கப்பட்டுள்ளன.

சோஷலிசத் தத்துவத்திற்குத் தேன் தடவித் தந்து — மக்களை, மாய்கைக்குள் ஆழ்த்தும் காங்கிரசார், சோஷலிசத்தை எப்படி அடையப்போகிறார்கள்? அடைவதற்கான திட்டங்கள் என்ன வைத்திருக்கிறார்கள்?

காங்கிரசாரின் உண்மை இலட்சியம் — சோஷலிசம்தான் என்றால், ஏன் அந்த இலட்சியம் பற்றி, அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

**'சாவரின் ரிபப்ளிக்'** என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் சட்டத்தில் **'சோஷலிஸ்ட் ரிபப்ளிக்'** —என்று குறிப்பிடப்படாத நிலையில் — ஏழையும்— பணக்காரனும் இணைந்திருந்து செயல்படுவதெப்படி? இயலுமா?

கிழிந்த துணிக்காக, குடுகுடுப்பைக்காரன் 'நல்ல காலம் வருகுது' என்பதைப்போல்தான், ஆட்சியினரும் தம்சுயநல நோக்கங்களுக்காக **சோஷலிசத்** தத்துவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் **'சுயராஜ்யம்'** அடையும் வழி என்று காந்தியார் காட்டியதைப்போல், இதுதான் சோஷலிசத்திற்கான வழி—முறை என்று காங்கிரஸ்காரர்கள் காட்டவில்லை; காட்ட முடியாது! காரணம் போலியான முகமலர்ச்சியோடு, உதட்டிலிருந்து **சோஷலிசம்** பேசுகிறார்கள் அவர்கள்.

—என்ற வகையிலெல்லாம் முகவை மாவட்டத்து மாநாடு கருத்துக்களை உகுத்திருக்கிறது. மாநாடு நடைபெற்ற இடமோ, வரலாற்றுச் சிறப்புடைய ஒன்று. மானத்துக்காக உயிர்நீத்த மருதுபாண்டியர்களைப் பெற்ற மாநகரம்!

மறவர் பெரும்படை அங்கே கூடியது! தமிழகத்தின் மானத்தைக் காக்கும் சிறப்புமிக்க பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இத்தகு சிறப்புக் குரியதாகவும், பெருமைக்கும் பீடுக்குமுரியதாகவும், அதனை நடாத்திக் காட்டிய மாவட்டச் செயலாளரும், வரவேற்புக் குழுத் தலைவருமான தென்னரசும், செயலாளர்கள் மாதவன், பில்லப்பன் ஆகியோரும், சேதுராமன், பெரி. அழகு, சோணையா, காத்தமுத்து, சின்னச்சாமி, நவமார்க்கண்டேயன், தங்கப்பன், முத்துமணி, போன்றவர்களும், தொண்டர்ப் படைத் தலைமையேற்று தொண்டின் உயர்வை மெய்ப்பித்த மாங்குடி மதியழகன், திருஞானசம்பந்தம் முதலானவர்களும், தொண்டர்களும், கோட்டையிலே கொடியேற்றிக் காட்டும் முன்மாதிரியாக கொடியேற்றிய தியாகராசனும், இன்னும் இதன் சிறப்பிற்குப் பலவழியிலும் பங்கேற்று உழைத்த அனைவரும் நம் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்!

இத்தகைய வீரர்களின் அணியைக் கொண்டிருக்கும் கழகம், வீழ்த்த முடியாதது என்று ஏதுமில்லை! வீழ்த்தப்படாத எதேச்சாதிகார சர்வாதிகாரங்கள் இல்லை! சர்வாதிகாரிகள்—எதேச்சாதிகாரிகள் வீழ்த்தப்பட்டு, மண்ணோடு மண்ணாக ஆகி, பஞ்சையாய் பராரியாய் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்! அந்த வரலாற்றைப் படைத்துக்காட்ட முடியும் என்ற நம்பிக்கையோடுதான் மாவட்டங்கள்தோறும் மாநாடுகள் நடத்தி வருகிறது.

இதுவரைபோலவே இனியும் தோழர்களின் அயரா உழைப்பும் தளரா ஊக்கமும் தமிழகத்தின் தலைவிதியை மாற்றப்போகிறது! அப்பெருமையைத் தமிழகம் பெறப்போகிறது என்று நிச்சயம் நம்புவோம்!

❁

## சிக்கனம்-எளிமை! இங்கல்ல!!

காலஞ்சென்ற டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் பெரிய தத்துவஞானி, சமய சாஸ்திரி, பன்மொழிப் புலவர், இசைஞர், மருத்துவர், ஏழை ஆப்பிரிக்க மக்களிடையில் அவர் ஆற்றிய இணையற்ற சேவைக்காக நோபல் பரிசு பெற்றவர். மன்னர்களுக்கும் ராஷ்டிரபதிகளுக்கும் நண்பர். அவர் ஒரு சமயம் தமது மருத்துவ மனையின் உதவிக்காகக் கொஞ்சம் நிதி திரட்டும் நோக்கத்துடன் தமது சொந்த நாடான பிரான்சுக்குப் புறப்பட்டுச் சென்றார். குறித்த நாளில் அவரை வரவேற்பதற்கு ரெயில்வே நிலையத்தில் ஊரே திரண்டு நின்றது. வண்டி வந்ததும், எல்லாரும் முதல் வகுப்புப் பெட்டிகளை நோக்கி ஓடினார்கள். சுவைட்சர் அவற்றில் இல்லை. பின்னர் ஆவலோடு இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் போய்ப் பார்த்தார்கள். அங்கும் இல்லை. இறுதியில் ஒரு மூன்றும் வகுப்புப் பெட்டியிலிருந்து அவர் இறங்கி வரக் கண்டார்கள்.

"என்ன, டாக்டர்? மூன்றும் வகுப்பு. . . ." என்று ஒரு நண்பர் ஆட்சேபிக்க ஆரம்பித்தார்.

டாக்டர் இலேசாகச் சிரித்துக்கொண்டே, "என்ன செய்யலாம்? நான் வந்த வண்டியில் நாலாம் வகுப்புப் பெட்டி இல்லையே!" என்று பதில் அளித்தார்.

இப்படி எளிமையான முறையிலேயே சுவைட்சர் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார். அவர் ஒருபோதும் தமது சொந்த சுகத்தை நாடியதில்லை: தமக்கென சௌகரியங்களைப் பெருக்கத் தேடியதில்லை!

# இட்லர்கூட சோஷியலிசம் பேசினான்!

ஒரு பணக்காரச் சிறுவன், ஒரு ஏழைச் சிறுவன் இருவரையும் ஒரு மனோதத்துவக்காரர் சோதனை செய்தார் ஒரு படத்தைக் காட்டி.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் ஒரு சிறுவன் தன் தாயாரைப் பார்த்துச் சிணுங்கும் காட்சி படத்தில் வரையப்பட்டிருந்தது.

படத்திலுள்ள சிறுவன் என்ன காரணத்துக்காகச் சிணுங்குகிறான் என்று கேட்டார் மனோதத்துவக்காரர்.

ஒரே படம்! இரண்டு சிறுவர்கள் பார்க்கிறார்கள்!! பதில்? இன்னும் கொஞ்சம் சோறு கேட்கிறான் சிறுவன். அதற்காகத்தான் சிணுங்கிக் கொண்டிருக்கிறான் என்று பதில் அளித்தான் ஏழைச் சிறுவன்.

எனக்குப் பசி இல்லை அம்மா? போதும் சாப்பாடு! இனிச் சாப்பிட முடியாது!! — என்று தாயிடம் சொல்கிறான் படத்திலுள்ள சிறுவன் — அதனால்தான் சிணுங்குவதுபோலப் படம் வரையப்பட்டிருக்கிறது என்று பதில் தந்தான், பணக்காரச் சிறுவன்!

ஒரே படம்! இருவேறு பதில்கள்!!

ஏழை, பணக்காரன் என்ற இருவேறு நிலைகள், இருவேறு இயல்புகளைத் தந்திருக்கிறது என்பதைக் காட்டுவது இந்தக் குட்டிக் கதை.

ஏழை, பணக்காரன் என்ற மாறுபட்ட நிலையை மாற்றாமல், அந்த நிலைமை காரணமாக ஏற்பட்டுவிடும் இயல்பினை மாற்ற முயற்சிப்பது, குதிரையின் காதுப் பக்கத்தில் மாட்டுக் கொம்பினைக் கட்டிவிடுவது போன்றதாகும்! விந்தைக் காட்சியாக இருக்கும் இயல்பு மாறாது.

ஏழை, பணக்காரன் என்ற நிலைமைகள், மனித இயல்பை வேறுவேறு தரமுள்ள தாக்குவது மட்டுமல்ல, சமூகத்திலே கசப்பும் கொதிப்பும், பேதமும் பிளவும், பகையும் சமரும் மூண்டுவிடுவதற்கும் அந்த நிலைமைகளும், அவற்றின் தொடர்பாக அமைந்துவிடும் இயல்பும் காரணமாகிவிடுகிறது.

நிலைமையை மாற்றுவதன் மூலம் இயல்பை மாற்றி, இந்த விரும்பத்தகாத சூழ்நிலையை அப்புறப்படுத்த முடியுமே தவிர, நிலைமையை அப்படியே வைத்துக்கொண்டு, கசப்பும் கொதிப்பும் போகவேண்டும், பேதமும் பிளவும் தொலையவேண்டும், பகையும் சமரும் கூடாது என்று 'உபதேசம்' செய்து பார்ப்பது, படகிலே உள்ள ஓட்டையைச் செப்பனிடாமல், உள்ளே புகும் தண்ணீரை வெளியே எடுத்துக் கொட்டிக்கொண்டே இருக்கும் முயற்சி போன்றதாகும்.

காங்கிரசாட்சிக்கு, நிலைமையை மாற்றவேண்டும் என்ற துணிவும் இல்லை; எண்ணமும் இல்லை. சொல்லப்போனால், இந்த நிலைமை தீதானது ஆபத்தை மூட்டவல்லது என்ற கருத்தே இல்லை; இந்த நிலைமை மாற்றப்படத்தக்கதுதான் என்ற நம்பிக்கையும் இல்லை.



# தேன்துளி தெளித்தால் தீர்ந்திடுமா கவலை?

நிலைமையை மாற்ருமல், இயல்பை மாற்ற முடியும் என்ற தவருன போக்கை காங்கிரசாட்சி மேற்கொண்டிருக்கிறது.

அந்தத் தவருன போக்கு காரணமாகத்தான், காங்கிரசாட்சி எங்கள் சோஷியலிசத்தில், ஏழைக்கும் இடம் கிடைக்கும், பணக்காரனுக்கும் இடம் கிடைக்கும், என்று பேசுகிறது.

சோஷியலிசம் என்பது திட்டவட்டமான ஒரு ஏற்பாடு; எல்லோருக்கும் இரண்டொரு சொட்டு தேன் தெளித்துவிடுகிற தந்திரம் அல்ல.

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், இந்நாட்டு சீமான்களை மட்டுமல்ல அமெரிக்க நாட்டுப் பெரிய முதலாளிகளையே அச்சம்கொள்ளச் செய்யாததற்குக் காரணம் இதுதான்; காங்கிரசின் சோஷியலிசப் பேச்சு விவரமறியாத ஏழைக்கென்றே தயாரிக்கப்படும் இனிப்புப் பானம் என்பதை அவர்கள் நன்ருகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

**இந்தியாவிலே 'முதல்' போட்டு தொழில் நடத்தச் சொல்லுகிறீர்களே; இந்தியா சோஷியலிசம் பேசுகிறதே; அங்கு பெரிய முதல்போட்டு தொழில் நடத்துவது ஆபத்து அல்லவா என்று அமெரிக்க நாட்டு முதலாளிகள் கேட்டபோது, அமெரிக்க அரசியல் தலைவரொருவர் புன்னகையுடன் கூறினுர்.**

**இந்தியாவில் பேசப்பட்டு வரும் சோஷியலிசம்பற்றிப் பயம் கொள்ளாதீர்கள் என்று.**

மேடையிலே 'சோஷியலிசம்' பேசிவிட்டு, சீமான்களின் மாளிகைகளில் விருந்து சாப்பிடும்போது, காங்கிரஸ் தலைவர்கள், விளக்கம் தருகிருர்கள்; விவரமறிந்த சீமான்கள்,

'எல்லாம் எங்களுக்குத் தெரியும்'

என்று குதூகலத்துடன் கூறிவிட்டு

பாவம், ஏழைகளும் வாழத்தானே வேண்டும்.

என்று உருகுகிருர்கள்.

**ஐயோ! பாவம்! ஏழை! அவனும் மனிதன்!** — என்ற இரக்கப் பேச்சு இன்று நேற்று தோன்றியது அல்ல; பஞ்சையும் பராரியும் தோன்றியபோதே தோன்றியது. அது பேச்சாக, பாட்டாக, நாடகமாக, காவியமாக, பேருரையாக, உபதேசமாக, வெளிவந்த வண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அந்தப் பேச்சு நீக்கிவிடவில்லை.

உழைப்பே, செல்வத்தை உற்பத்தி செய்கிறது. உழைப்போரின் தொகை அதிகம்.

உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் செல்வம், உழைப்போர் அனைவருக்கும் ஒரு சீராகக் கிடைக்குமாளுல், சமூகம் முழுவதும், பலன் பெறும்; ஒரு புறம் சோலை, சுற்றிலும் பாலை என்றநிலை ஏற்படாது.

**ஒரு சீராகக் கிடைக்குமானுல்!**—என்று கூறிவிட்டோமே தம்பி! எளிதாக! இது தன்னுலே நடைபெற்றுவிடுமா, பாவ புண்ணியம் பற்றிய உணர்ச்சி மூலமாக ஏற்பட்டுவிடுமா? ஏற்பட்டு விடுவதில்லை!

வருவாய் அல்லது செல்வ உற்பத்தி சமூகத்தில் ஒரு சீராகப்போய்ச் சேராததால்தான், இத்தனைக்கேடுபாடுகள் ஏற்பட்டுவிட்டன.

இந்தக் கேடுபாடுகளை நீக்க வேண்டுமாளுல், உற்பத்தி ஆகிற செல்வம் ஒரு சீராக, சமூகம் முழுவதற்கும் பரவிடும் முறையைச் செயல்படுத்த வேண்டும். அதனை ஒரு அரசுதான் துணிந்து மேற்கொள்ள முடியும். அந்தத் துணிவு ஒரு அரசுக்கு ஏற்பட வேண்டுமாளுல் அது, செல்வத்தைத் தமதாக்கிக்கொள்ள முனைந்திடும் செல்வவான்களின் செல்லப் பிள்ளையாகி விடக் கூடாது.

**சில திங்களுக்கு முன்பு இந்தியப் பூபாகத்திலே மிகப் பெரிய கோடீஸ்வரராக உள்ள பிரலா முதலாளிகளைக் கூட்டிவைத்து, நாம் அனைவரும் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியே அமைவதற்காகப் பாடுபடவேண்டும்; ஏனெனில் நம்மைப் பாதுகாக்கக்கூடியது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று பேசினுர்.**

கட்டுப்பாடுகள் சில விதிக்கும்போது கடுங்கோபம் கொள்கிருர்கள்; வரி கூடுதலாக்கும்போது வெகுண்டெழுகிருர்கள்; ஆளுலும் அதே முதலாளிகள் ஆர அமர யோசித்துப் பார்க்கும்போது, உண்மையான 'சோஷியலிசத்தை' வரவிடாமல் தடுத்து நிறுத்தவும், அதேபோது சோஷியலிசம் பேசி ஏழைகளை மயக்கத்திலாழ்த்தி வைக்கவும் காங்கிரசை விடத் திறமையான கட்சி எதுவுமில்லை என்பதை உணருகிருர்கள்; காங்கிரசுக்கு ஆதரவு திரட்டித் தருகிருர்கள்.

வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட கணக்கின்படி, சென்ற பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு முதலாளிகள் கொடுத்த நன்கொடைத் தொகை கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயல்லவா?

இந்த ஒரு கோடி, எதற்கு? எவ்வளவு வேண்டுமானுலும் சோஷியலிசம் பேசுங்கள்; ஆளுல் நடைமுறைக்குக் கொண்டு வராதீர்கள் என்று கேட்டுக்கொள்வதற்குத்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிவிடுபவர்களெல்லாம் ஏழையை வாழவைத்து விடுவார்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. **இட்லர் பேசாத சோஷியலிசமா!**

**நாஜிசம்** என்று கூறப்படுகிறதே, இட்லர் புகுத்திய முறை நினைவிலிருக்கிறதல்லவா, அதுகூட **சோஷியலிசம்** என்ற பெயருடன் இணைந்ததுதான்.

இதோ இவர்கள் தமது சோஷியலிசத்துக்கு ஒரு அடைமொழி சேர்த்துக் கொண்டிருக்கிருர்கள் அல்லவா, ஜனநாயக சோஷியலிசம், (Democratic Socialism) என்று; அதுபோல, **இட்லர்** தம்முடைய சோஷிய

# இட்லர் பாதையில் இருக்கிறார்கள் இவர்கள்!

வீசத்துக்கும் ஒரு அடைமொழி சேர்த்துக்கொண்டார்; (National Socialism)—தேசீய சமதர்மம்-என்பதாக.

அந்த (National Socialism) என்பதுதான் சுருங்கி மருவி, **நாஜிசம்** என்ற பெயராயிற்று.

என்ன கண்டனர் ஜெர்மன் மக்கள்? பயங்கரமான போர்!

என்ன தந்தது இந்த நாஜிசம், உலகுக்கு? அமளி! அழிவு!

இவர்கள் ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறார்கள்.

எங்கள் சோஷியலிசத்தில் முதலாளியும் இருப்பான்; ஆனால் அவன் வெறும் சுரண்டல்காரனாக இருக்கமாட்டான்; இலாபவேட்டைக்காரனாக இருக்கமாட்டான்; ஏழையை வாழவைக்கும் கருணாமூர்த்தியாக இருப்பான்; அவனை அப்படி மாற்றுவோம் என்று; அதுபோலவே, இட்லர் சொன்னான் என்னுடைய நேஷனல் சோஷியலிசத்தில் (தேசீய சமதர்மத்தில்,) முதலாளி இருப்பான், ஆனால் அவன் தேசீய முதலாளியாக, நாட்டு நலனைக் காத்திடும் முதலாளியாக, அரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, நாட்டு வளத்தைப் பெருக்கிடும் முதலாளியாக இருப்பான் என்று பேசினான்! உரத்த குரலில்! கேட்போர் மயங்கும் வண்ணம்! இதோ ஓர் புது தத்துவம் என்று பலரும் பாராட்டத்தக்க விதமாக.

தம்பி! பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்,—இதழாசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு விளக்கம் தயாரித்து அளித்தனர், வெறும் சோஷியலிசத்தைவிட, இட்லர் தந்திடும் நேஷனல் சோஷியலிசம் சிலாக்கியமானது, நாட்டுக்கு ஏற்றது, என்றெல்லாம்.

இட்லருடைய நாஜிசத்தில், அதாவது நேஷனல் சோஷியலிசத்தில், **'க்ருப் தைசன்,** போன்ற பெரும் முதலாளிகள் கோட்டை கட்டி வாழ்ந்தனர்; தம்மை தேசீய முதலாளிகள் என்று காட்டிக் கொள்வதற்காக, தமது கோட்டைகளிலே **சுவஸ்திக்** கொடியை (இட்லரின் கொடியை)ப் பறக்க விட்டனர்.

அந்த நாஜிசம் ஜெர்மன் நாட்டு ஏழைகளைக் காப்பாற்றிற்று? பயங்கரமான அழிவைத் தந்தது; நாடே அடிமைக் காடு ஆக்கப்பட்டது.

இவர்கள் கூடத் தம்பி! வெறும் சோஷியலிசம் என்பதைவிட, நேஷனல் சோஷியலிசம் என்று கூறுவது வசிகரமாக இருக்கும் என்ற கருத்துடையவர்கள் தாம், ஆனால், நேஷனல் சோஷியலிசம் எனும் நாஜிசம் உலகிலே—ஒரு கெட்டபெயர் எடுத்துவிட்டதால், மக்கள் வெறுப்பதால், நேஷனல் சோஷியலிசம் என்று கூறக்கூடாது என்று தீர்மானித்து ஜனநாயக சோஷியலிசம் என்று பேசிவருகிறார்கள்.

**இட்லர் முதலாளிகளை கொலுவிருக்கச் செய்தான், அவர்கள் தளக்குக் கொடிபிடிப்போர்களாக இருந்துவரவேண்டும் என்ற நிபந்தனையுடன். இவர்களும் எத்தனை பிர்லாக்களும் இருக்கலாம், தொழில் நடத்தலாம், செல்வபுரி அமைக்கலாம், ஆனால் ஒரு நிபந்தனை, எமது 'போஷகர்களாக' இருக்கவேண்டும் என்று கூறி விட்டனர்.**

**இங்கும் தைசன்கள் வளருகிறார்கள்.**

**அன்று தைசனை வளரவிட்டபடி நேஷனல் சோஷியலிசம் பேசினான் இட்லர்.**

**இன்று பிர்லாக்களைக் கொழுக்க வைத்துக் கொண்டே காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் பேசி வருகிறது.**

முதலாளி, போகபோக்கியத்தில் புரளுவதற்காகத் தன் செல்வத்தைப் பயன்படுத்தினால், அது கெடுதல், ஆனால் அவன் தன் செல்வத்தை நாட்டு வளத்தை அதிகமாக்க, எழில்கூட்ட, ஏற்றம் உண்டாக்க, பிற நாட்டார் கண்() அஞ்சத்தக்க வலிவு நமது நாட்டுக்கு ஏற்படப் பயன்படுத்தினால், நல்லதுதானே என்று கேட்டான் இட்லர். அவனிடம் சொக்கிப்போன மக்கள் ஆம்! ஆம்! என்றனர்.

அதுதான், என் அருமை மக்களே! நாஜிசம்!!— என்றான் இட்லர்; வாழ்க நாஜிசம் என்று ஜெர்மன் மக்கள் முழக்கமிட்டனர்!

"காஞ்சி"
இரண்டாம்
ஆண்டு மலர்
அண்ணாவின்
அரிய பல படைப்புக்களுடன்,
முன்னணியினர் பலரது
கதை, கட்டுரை, கவிதை
முதலானவைகளும் மிளிர,
மணமிக்க மலர் தயாராகிறது!

# ஆமெனில் அணைப்பு; அல்லால் அடி, உதை!

இங்கே அதேபாணியில் பேச்சு!!

தொழில் பெருகவேண்டுமல்லவா?—ஆமாம்!

தொழில் பெருகவேண்டுமானால் புதியபுதிய தொழில் நடத்தும் முதலாளிகள் வேண்டுமல்லவா, அதனால் நமது சோஷியலிசத்தில் முதலாளிகள் இருக்கிறார்கள்; தவறா?—என்று கேட்கின்றனர், ஆளவந்தார்கள்.

"ஆம்" என்பவன் அணைத்துக்கொள்ளப்படுகிறான், அது சரியில்லையே! என்பவன் அடித்துநொறுக்கப்படுகிறான்.

**இட்லரின் நேஷனல் சோஷியலிசத்தில் சுவஸ்திக் திரைக்குப்பின்னாலே இருந்துகொண்டு முதலாளிகள் கொட்டமடித்தார்கள். காங்கிர சாட்சியில், மூவர்ணக்கொடிமறைவிலே இருந்துகொண்டு, முதலாளிகள் பெருத்துக்கொண்டு வருகிறார்கள்; காங்கிரஸ் கட்சியையே குத்தகைக்கு எடுத்து நடத்திக்கொண்டும் வருகிறார்கள்.**

அரண்மனைபோன்ற மாளிகைகள், அன்னங்கள் ஊர்ந்து செல்லும் அழகிய செயற்கைக் குளங்கள், அவைகளிலே துள்ளிடும் பல வண்ணமீன்கள், அவற்றினைக்கண்டு கலகலவெனச் சிரிப்பொலி எழுப்பும் சிங்காரிகள், அந்தச் சிங்காரிகளின் இதழ்கண்டு ஏங்கிடும் சீமான்கள், இந்தக் காட்சியை ஓவியமாக்கியவர்கள், கவிதை இயற்றியவர்கள், இவை எல்லாமே இருந்தன, பிரான்சு நாட்டில். இவற்றை அந்தநாட்டு ஆட்சியாளர்கள், சீமான்கள் போகபோக்கியத்தில் புரளும் நிலை என்று கருதவில்லை; மாறாக அவர்கள் இந்த நிலையினை,

பிரன்ச்சுநாட்டு எழில், ஏற்றம்!

பிரன்ச்சு நாட்டுச் சிற்பக் கலையின் சிறப்பு!

பிரன்ச்சுநாட்டு ஓவியத்திறமை!

பிரன்ச்சு நாட்டுக் காவியப்புலமை!

பிரன்ச்சு நாட்டில் காதல், ஒரு கலையாகி இருக்கும் நேர்த்தி என்றுதான் பெருமிதம் கொண்டனர்.

பிரன்ச்சு நாட்டு மக்கள்கூட, நெடுங்காலம் நம்பினர்! உண்மை பிறகுதான் வெடித்துக் கிளம்பிற்று!!

அதுபோன்றே, இங்கு முதலாளிகள் அமைத்துள்ள பணக்கோட்டையை பாரதநாட்டுச் சிறப்பு என்று காங்கிரசார் பேசுகின்றனர்; நம்பச் சொல்லுகின்றனர்.

ஒரு அமைச்சர் தம்பி! துணிந்து, வெகுதூரம் சென்றுவிட்டிருக்கிறார். முதலாளிகள் பணத்தைக் குவித்துக்கொள்கிறார்கள் என்று கொதிப்படைகின்றீர்களே; எங்கே போய்விடும் அவர்களிடம் குவிந்துள்ள பணம்? இந்த நாட்டில்தானே இருக்கிறது! வெளிநாடுகளுக்கா போய்ச் சேர்ந்துவிட்டது அந்தப் பணம்? இங்கேயே, நம் நாட்டிலேயேதான் இருக்கிறது! இந்தநாடு, அவர்களுக்குமட்டுமா சொந்தம்? இல்லையே! இது உனக்கும் சொந்தமான நாடுதானே! அப்படியானால், அந்தப்பணம், உன்னுடைய நாட்டில்தானே இருக்கிறது!! இதை அறியாமல் முதலாளிகளிடம் போய்க் குவிகிறதே பணம் என்று கொதித்துப் பேசுகிறாயே, தவறல்லவா! விவரம் தெரியாததால் வேதனைப்படுகிறாய்! தெரிந்துகொள், அவ்வளவு பணமும் இங்கேயேதான் இருக்கிறது, நம்நாட்டிலேதான் இருக்கிறது. கவலைப்படாதே, நாம் விரும்பும்போது அந்தப் பணத்தை வரிபோட்டு எடுத்துக்கொள்ளலாம். பணம் எங்கும் போய்விடவில்லை, இங்கேதான் இருக்கிறது—என்று பேசினார்—துணிந்து!!

தம்பி! கொள்ளைக்காரன், கன்னக்கோலன், காது அறுப்பவன், அகப்பட்டதைச் சுருட்டுபவன் போன்றோர் திருடுகிறார்களே, அந்தச் செல்வமெல்லாம் கூட இங்கேதான் இருக்கிறது, நம்முடைய நாட்டிலேயேதான்! அவர்கள், களவாடியதை கனடா நாட்டுக்கோ, காங்கோ நாட்டுக்கோ ஆஸ்திரேலியாவுக்கோ, அர்ஜெண்டினாவுக்கோ, கொண்டோடிவிடவில்லை; இங்கேயேதான் இருக்கிறது; இந்த நாட்டிலேயேதான்; புண்ய பூமியாம் பாரத நாட்டிலேயே இருக்

## விரைந்தெழுக!

ஆனைகட்டிப் போரடித்த இந்த நாட்டில்
ஆடுகட்டிப் போரடிக்கும் காலம் தோன்றும்!
பானைக்குள் அரிசிவைத்த மக்கள், சட்டைப்
பைக்குள்ளே அரிசிவைக்கும் நாளும் தோன்றும்!
மோனையைப்போல் தொடர்ந்தடுத்த துன்ப வாழ்வு
முறிந்துவிழ இவ்வாட்சி மாற வேண்டும்!
ஏனையவர்க் கிதையெடுத்துச் சொல்லாவிட்டால்
எதுகையைப்போல் பின்னேறும் நமது வாழ்வு!

நாவலர்போல் நிமிர்ந்துநலம் வளர்ந்த நாட்டில்
நாமெல்லாம் சோற்றுக்குக் கதறு கின்றோம்!
காவலரை இப்போதே மாற்றா விட்டால்
கண்ணகியின் சிலம்பைப்போல் சிதறும் வாழ்வு!
யாவருக்கும் இதையெடுத்துக் கூறா மாகில்
யாப்பிழந்த பாடலைப்போல் மறைந்தே
போவோம்!
ஆவதெலாம் ஆகட்டும்! இந்த ஆட்சி
அடியோடு மாறட்டும்! புறப்படுங்கள்!!

பூட்டற்ற வீடுநிறை தென்னா டென்று
புகன்றுசென்ற 'மெகஸ்தனீசு' திரும்பி வந்தால்
வீட்டுக்குள் அடுப்பில்லா நாடென் றிதை
வியந்தெழுதி விடுவானிவ் வாட்சி வாழ்ந்தால்!!
கோட்டைக்குள் கழகத்தை அனுப்ப இன்றே
குதித்தெழுக தென்புலமே! மக்க ளாட்சி
வேட்டாட்சி ஆவதினைத் தடுக்க இன்றே
விரைந்தெழுவாய! தி. மு. க. அரசு காண்பாய்!!

—வில்லவன் கோதை.

# தொண்டு பல செய்த தூயவரோ அவர்?

கிறது. ஆகவே பொருள் களவு போய்விட்டதே என்று கூச்சல் எழுப்பாதே; உன் பொருள் வேறு எந்த நாட்டுக்கும் போய்விடவில்லை; இந்த நாட்டிலேயே, உன் சொந்த நாட்டிலேயே இருக்கிறது என்று எவனும் கதைக்காகக்கூடத் துணிந்து கூறமாட்டான். ஆனால் நாடாள வந்துள்ள நல்லவர்கள் துணிந்து பேசுகிறார்கள், ஏழையின் வயிற்றில் அடித்து முதலாளிகள் குவிக்கும் பணம் வேறு எங்கும் போய்விடவில்லை; இந்த நாட்டிலேயே இருக்கிறது என்று.

கேட்டுக் கொள்கிறார்கள், கேட்டுக் கொள்ளவேண்டி இருக்கிறது.

முதலாளித்தனத்தை நீக்க மனமற்றவர்கள், துணிவற்றவர்கள் ஏன் 'சோஷியலிசம்' என்று பேசுகிறார்கள்? காரணமற்று அல்ல!

சோஷியலிசம் என்பதனை நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரும்புகிறார்கள் என்பது புரிகிறது.

உண்மையிலேயே சோஷியலிசத்தைச் செயல்படுத்தக் கூடியவர்கள் மக்களை அணுகினால் பேராதரவு பெற்றுவிடுவார்களே, என்ற அச்சம் காரணமாக, மற்றவர்களை சோஷியலிசம் பேசவிடுவதா. அதையும் நாமே பேசி, உண்மை சோஷியலிஸ்டுகள் மக்களிடம் தொடர்புகொள்ளாதபடிசெய்துவிடலாம் என்ற நைப்பாசை காரணமாகவே காங்கிரசாட்சியினர் சோஷியலிசம் பேசுகின்றனர்.

அவர்களின் பேச்சு போலி என்பதையும், அவர்களின் போக்கு வெறும் பசப்பு என்பதையும் உணர்ந்தும், கட்டுக்கோப்புள்ள காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் துணிவற்று, காங்கிரஸ் கட்சிக்குள் நுழைந்து இடம்பெற்று, மெள்ளமெள்ள, காங்கிரஸ் கட்சியையே கருவியாக்கிக்கொண்டு சோஷியலிசம்கொண்டு வந்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சிலர் இருக்கிறார்கள். அதுபோலவே காங்கிரசின் செல்வாக்கைப் பழுதுபடாதபடி பார்த்துக்கொள்ளப் பெரும்பொருள் செலவிட்டு, அதனைத் தம்மிடம் வைத்துக்கொண்டு, கருவியாக்கி தங்கள் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற துணிவுடன் செல்வவான்கள் இன்று காங்கிரசில் இடம் பெற்றுள்ளனர்.

இந்த இருதரப்பினருக்கும் பலப்பரிட்சை நடத்தப்படுவதில், இன்றுவரையில் செல்வவான்களின் கரமே ஓங்கிக் காணப்பட்டு வருகிறது.

அப்பழுக்கற்ற, உண்மையான சோஷியலிசத்தை மேற்கொண்டால், காங்கிரஸ் கட்சியில் மாஜி மகாராஜாக்களையும், ஆலை அரசர்களையும், வணிகக் கோமான்களையும் காணமுடியாது. அவர்கள் தனித்திட்டிலே சிக்கிக் கொள்வார்கள்; அவர்களின் ஆதிக்கத்தை நீக்கிடும் திட்டம் எது கொண்டுவரப்பட்டாலும் எதிர்த்திடும் வலிவு அவர்களுக்குக் கிடைக்காது.

போன மாதத்திலேதான் தம்பி! ராம்கார் ராஜா காங்கிரசில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்; இதழ்களில் பார்த்திருப்பாயே!

ராம்கார் ராஜா காங்கிரசில் நுழைகிறார், பழம்பெரும் காங்கிரஸ் தலைவர் அஜாய்குமார் முகர்ஜி காங்கிரசைவிட்டு வெளியேறுகிறார். நிலைமை புரிகிறதல்லவா! உனக்குப் புரிகிறது, ஆனால் காங்கிரஸ் தொண்டர்கள் எங்கே இதனைப் புரிந்துகொள்ளுகிறார்கள்.

இதே ராம்கார் ராஜா சுதந்திரக் கட்சியில் இருந்தபோது எதிர்த்தனர்; இன்று அணைத்துக்கொள்கின்றனர்; அகமகிழ்கின்றனர். எதனால்? அவர் தியாகி என்பதனாலா? ஏழை பங்காளர் என்பதனாலா? தொண்டு பல செய்த தூயவர் என்பதனாலா? இல்லையே! அவரிடம் உள்ள இலட்சங்கள், ஓட்டு வேட்டைக்குப் பயன்படும் என்பதனால்! அவர் நோட்டுகளை நீட்டி ஓட்டுகளை வாங்குவார், பிறகு காங்கிரஸ் வெற்றி! என்று முழக்கமிட்டு மகிழ்ச்சி அடையலாம் என்ற ஆசை காரணமாக!

இத்தகையவர்கள் இருக்கும்போது காங்கிரசால் எப்படி சோஷியலிசம் புகுத்துவதில் வெற்றி காண முடியும்!

தங்களை ஆதிக்கம் செலுத்தவும், தொழில் அமைப்புகளில் தர்பார் நடத்தவும் உரிமை கொடுத்து, வசதி ஏற்படுத்திக் கொடுத்து, பாதுகாப்பும் செய்து கொடுத்துவிட்டு, ஏழைகளின் மனம் குளிர்ச்சி கொள்வதற்காக சோஷியலிசம் பேசுகிறோம், அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள் என்று சொல்லும்போது, அந்த முதலாளிகளுக்கு, காங்கிரசிலே இருப்பதாலே என்ன நட்டம்; கசக்குமா, குமட்டுமா!

பெரிய அளவிலே வளர்ந்து, நாடாளும் வாய்ப்பும் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியிலே இடம் பெற்றுக் கொள்வதன் மூலம், முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதுடன், ஏழை எளியோரின் பகையும் தங்கள்மீது பாயாமல் ஒரு கேடயத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

படிப்படியாகவாகிலும் சோஷியலிசம் வருகிறதா என்று பார்த்தாலும், வராதது மட்டுமல்ல, நாளாக

## தந்தைக்குப் பின்....

நேரு சகாப்தம்! அவர் ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கே அவரை வழக்கம்போல பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொண்டார்கள்- ஒருவர் கேட்டார்:

"இந்தியாவில் உங்களுக்கு எத்தனைப் பிரச்னைகள் உள்ளன!"

நேரு சொன்னார்:

"நாற்பது கோடிப் பிரச்னைகள்!"-என்று.

நினைவுக்கு வருகிறதா..அண்மையில் அமெரிக்கா சென்ற இந்திரா அம்மையாரும் இதே பதிலை நிருபர்களிடையே கூறியதாக வந்த செய்தி!

# கூரைஏறிகோழிபிடிக்காதவன் கோபுரம்ஏறி..

வாக, முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்துகொண்டு வருகிறது.

**உள்நாட்டு முதலாளிகளுக்கு இப்போது வெளிநாட்டு முதலாளிகளின் துணை; குறிப்பாக அமெரிக்க முதலாளிகளின் துணை அதிக அளவிலே கிடைத்துக்கொண்டு வருகிறது. உள்நாட்டு முதலாளிகளிடம் காட்டும் பரிவு மரியாதையைக் காட்டிலும் அதிக அளவுக்கு அமெரிக்க முதலாளிகளுக்கு இந்தியப் பேரரசை நடத்திச் செல்லும் காங்கிரஸ் தலைவர்கள் காட்டிக்கொண்டு வருகிறார்கள்.**

காங்கிரசின் மூலமாக, எப்படியாகிலும் சோஷியலிசத்தைப் புகுத்திவிடலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டு, காங்கிரசிலே இருந்து வருபவர்களும், இந்தப் போக்கைக் கண்டு மனம் வெதும்பி சிற்சில நேரங்களில், கண்டனம் உமிழ்கிறார்கள். பிறகோ. கட்சிக் கட்டுப்பாடு அவர்களை ஒடுக்கிவிடுகிறது. காங்கிரசுக்கு ஓட்டு தேட அவர்களே கிளம்பிவிட வேண்டி நேரிட்டு விடுகிறது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, ஒரு சமதர்ம முன்னணி இருக்கிறது! காங்கிரஸ் கட்சி போலியாகத்தான் சோஷியலிசம் பேசுகிறது என்பதற்கு இதனைவிடச் சான்று தேவையில்லை, அல்லவா?

**மெய்வழிச் சபைக்குள் ஒரு உண்மை நாடுவோர் சங்கமும், சைவ மெய்யன்பர் கூட்டத்திற்குள், இறைச்சி விரும்பாதார் மன்றமும், இருந்திடின், விந்தை என்பீர்கள் அல்லவா! ஆனால் ஜனநாயக சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சோஷியலிச முன்னணி என்ற ஒரு பிரிவும் இருக்கிறது!!**

அந்த முன்னணியினர் சின்னாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளனர்;

> காங்கிரஸ், இவ்வளவு ஆண்டுகளாகியும் சோஷியலிசத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை.
>
> சோஷியலிசத்தைக் கொண்டு வரும் முயற்சியில் இதுவரையில் காங்கிரஸ் கட்சி ஈடுபடவேயில்லை.
>
> சோஷியலிசப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கிற இதே நேரத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்துகொண்டு இருக்கிறது என்பதாக.

இந்த 'கண்டுபிடிப்புக்கு'ப் பிறகும் அவர்கள் ஏன் காங்கிரசிலே இருக்கவேண்டும் என்று கேட்கிறாய். நியாயமான கேள்வி! அதைவிடத் தேவையானகேள்வி. உள்ளே இருப்பவர்களே மனம் குமுறிக்கிடக்கும் போது, ஊராரைப்பார்த்து ஜனநாயக சோஷியலிசம் வேண்டுமானால், காங்கிரசில் வந்து கூடுங்கள் என்று அழைக்கிறார்களே, பொருள் இருக்கிறதா!

ஆனால் அழைக்கிறார்கள்!! ஏன்? சோஷியலிசம் என்பதன் கவர்ச்சி மக்களை ஈர்த்துக்கொண்டு வரும் என்பதால்.

வைகுந்தம் போக விரும்புவோரெல்லாம் என்னோடு வருக!—என்று அழைத்தான் ஒருவன்,

நெற்றியிலே திருநாமமும் கழுத்திலே துளசி மணிமாலையும் இருந்தது கண்டவர்கள், அவனை நம்பி, "வைகுந்தம் போக வழி எது, சொல்லுங்கள் வருகிறோம்" என்றார்கள்.

பள்ளி கொண்டான் கோயில் கோபுரம் தெரியுமா அதன் மீது ஏறவேண்டும்! அங்கே சென்றதும், வைகுந்தம் போகும் வழியை நான் காட்டுகிறேன்" என்றான் திருநாமதாரி, மக்கள் யோசித்தனர், சிறிதளவு தயக்கம் அவர்களுக்கு.

கட கட வெனச் சிரித்தான் ஒருவன்; மக்கள் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

வைகுந்தத்துக்கு வழி காட்டுவதாகக் கூறுகிறாரா இவர்! கோபுரம் ஏறிக் காட்டப் போகிறாரா? ஏமாளிகளே! இவன் யார் தெரியுமா? இவன் கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத பேர்வழி, அவன் வீட்டுக் கோழி, கூரையிலே ஏறிக் கொண்டது; கூரை ஏறிக் கோழியைப் பிடிக்க முடியாமல், கல்லை எடுத்து அதன் மீது வீச, குறி தவறி, வழியே வந்து கொண்டிருந்த மணியக்காரர் பிள்ளை தலை மீது விழ, மணியக்காரரின் ஆட்கள் இவனை நையப்புடைத்தார்கள், மண்டையில் பலத்த அடி; மூளை குழம்பிவிட்டது; அது முதற் கொண்டு இவன் இப்படிதான் எங்கெங்கோ அலைந்து, வைகுந்தத்துக்கு வழி காட்டுகிறேன் என்று குளறிக் கொண்டிருக்கிறான், **கூரை ஏறி கோழி பிடிக்க முடியாத இவனா கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழி காட்டப்போகிறான்!"** என்று விளக்கமளித்தானாம்.

அதுபோல, ஓரளவு கூட சோஷியலிசத்தைப் புகுத்த முடியாதவர்கள் என்று காங்கிரசைக் கண்டித்துக் கொண்டு, ஆனாலும் காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் தந்திடும் என்றும் அந்த முன்னணியினர் பேசுகின்றனர், விந்தை அல்லவா?

விந்தைமட்டுமல்ல; இது விபரீதமான யோசனை என்பதை உணர்ந்து கொண்டு வருகிறது நாடு.

நாடு பெற்றுள்ள அந்த உணர்வினைத் தந்திட, தம்பி! நீ மிகுந்த பாடுபட்டிருக்கிறாய்.

நீ, பட்ட பாடுகளுக்கு ஏற்ற பலனைப் பெறுவதற்கான நாளும் நெருங்கிக் கொண்டு வருகிறது, உன் நடையிலேயும் புது வேகம் காண்கிறேன்; மகிழ்கிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை




## 2—11

## எங்கே வந்தாள்?

தரையில் விழுந்த செந்தாமரையின்கூந்தலைப் பிடித்திழுத்து, நிறுத்தினான் சோலையப்பன்.

"அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்!" என்று அழுகையினிடையே அவனது முகத்தைப் பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டே கூறினாள்."

"மன்னிக்க வேண்டுமா, உன்னை? எதற்காக? உனக்கும் எனக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? மரியாதையாகச் சொல்கிறேன்—போ வெளியே!" என்று திரும்பவும் அவளது கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினான்.

"ஆத்திரப்படாதீர்கள்! நான் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள், அத்தான்!" என்று அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு, கெஞ்சினாள்.

"உன் பேச்சைக் கேட்டு உன் மத்தனான காலம், மலையேறிவிட்டது! உன் செவ்விய முகத்தையும் சேல்விழியையும், இடை அசைவையும் இதழ்ச் சிரிப்பையும் கண்டு, கள்வெறிக் கொண்ட அந்த ஏமாளி சோலையப்பன் அல்லன் நான்! பளிங்குச் சிலையே, பரிமளச் சோலையே, பூங்கொத்தே, புன்னகைக் கொடியே, செங்கனியே செந்தளிரே என்றெல்லாம் காதல் சுவை சொட்டச் சொட்ட மனமாரப் பேசினானே, அந்த சோலையப்பன் இன்று சுயதெளிவு பெற்றுவிட்டான்!...எவளை எனது உயிருக்கு உயிரானவள் என்று நம்பினேனோ, எவளைப் பார்க்காமல் ஒரு நொடி கூட இருக்க முடியாமல் தவித்தேனோ — அவள் தந்திரக்காரி, தாசிக் குணங் கொண்டவள் என்பதைத்தெரிந்துகொண்டேன். எந்தக் கண்கள் என் இதயத்திற்குக் குளிர்ச்சியையும் இன்பத்தையும் தந்தனவோ — அந்தக் கண்களைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் குத்திகொள்ளையாக்கிவிடத் துடி துடிக்கிறேன்! இந்தச் சிறைக்குள் இல்லாமல் நான் வெளியில் இருந்திருந்தால் உன்னை என்ன செய்திருப்பேன் தெரியுமா? நறுமணத் தைலங்கள் தடவி அலங்காரமாகச் சீவி முடித்திருக்கும் உன் கருநிறக் கூந்தலை வெட்டியெறிந்திருப்பேன்! மொட்டையடித்து, முகத்தில் சூடு போட்டு, கந்தல் உடுத்தி, கழுதைமேல் ஏற்றி ஊர்வலம் நடத்தியிருப்பேன்! அது மட்டுமா, ஒரு பாவமும் செய்யாத சூர்ப்பனகையை மானபங்கம் செய்தானமே இராமனின் இளவல், அதைப் போல உன்னைச் செய்திருப்பேன்!...காதகியே, நாட்டிற்கு வர விருந்த எவ்வளவு பெரிய நன்மை, உன்னால் பாழாகிவிட்டது! மக்களின் கண்மணி பொன்னையாவின் கனவை, கருகிவிடும்படிச் செய்துவிட்டு, மன்னித்துவிடுங்கள் என்று எவ்வளவு சுலபமாகக் கூறிவிட்டாய்! அப்படிச் சொல்ல உனக்கு எவ்வளவு துணிவு?"

"அத்தான்! தூமகேதுவின் ஒற்றர் குழுவைச் சேர்ந்தவளாக நான் இருந்தது உண்மை! நிலா முற்றத்தில் வலிய என்னை இழுத்து, வாரியணைத்து வாலிப விருந்தளித்தீரே — அந்த இன்ப நொடிக்கு முன்னெடிவரை, மயக்கிப்பேசி இரகசியங்களை அறிந்து தூமகேதுவிடம் காட்டிக்கொடுக்கவேண்டும் என்ற நயவஞ்சக எண்ணத்தோடே உம்மோடு பேசினேன், சிரித்தேன், பழகினேன். தாங்கள் என்உடலுக்குத் தலைவராகிவிட்ட பிறகு உள்ளத்தையும் தங்கள் பாதங்களில் பணியும்படிச் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிட்டேன் .........!"

"மாமூலான உன் மயக்குப்பேச்சு ஆரம்பமாகிவிட்டதா?செந்தாமரை! இன்னமும் என்னைச் சூதறியா வெகுளி என்று எண்ணிக்கொண்டு கண் வித்தையிலும், கரும்புப் பேச்சிலும், சொக்கச் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறதே — உன் அறியாமைக்காக நான் இரக்கப்படுகிறேன்! உன் சிருங்காரப் பேச்சில் இனிமை, குளுமை, சுகம் — ஏன் இந்த உலகமே — அடங்கியிருப்பதாக எண்ணிப் பூரிப்பேனே, அந்தப் பூரிப்பில், என்னையே மறப்பேனே அது அந்தக்காலம்! கடலைக்கடைந்து அமிர்தம் எடுத்தார்களாமே, தேவர்களும், அசுரர்களும் ஒற்றுமையாகக் கூடி! அமிர்தத்தைக் கண்டதும், அதைத் தாங்கள் மட்டுமே அடையவேண்டும், கள்ளங்கபடமில்லாமல் தங்கள் சொல்லைக் கேட்டு வியர்வையைக் கடல்நீரில் கலந்தார்களே, அந்த மலைத்தோள் அசுரர்களை ஏமாற்றவேண்டும் என்று தேவர்கள் நினைத்து, மோகினியின் அழகால், அந்த நினைப்பைப் பூர்த்திசெய்துகொண்டார்களாமே! அந்தக்கதையை நம்பியே —தேவர்கள் காட்டிய வழியில் சென்றால்தான் வெற்றி நிச்சயம் என்ற நினைப்பிலே தூமகேது பெண்களின் அழகை நம்பி பெருந்திட்டம் தீட்டியிருக்கிறான்! பாண்டிய நாட்டின் கண்மணிகளைப் பலிபீடத்தில் சாய்க்கவும், சைவத்தைக் கொலுமண்டபத்தில் நிரந்தரமாக நடனமாடவிடவும் வேண்டுமென்பது அவனது நினைப்பு! அந்த நினைப்பை ஈடேற்றிக்கொள்ள மோகினியான உன்னை அந்தக் கயவன் பயன்படுத்திக்கொள்கிறான்! இந்தக் காலத்து அசுரர்கள், மடலவிழ்ந்து மணம் பரப்பும் அழகிய புதுமலர் போன்ற மோகினியிடம் இன்பத் தேன் அருந்த வண்டுகளாகமாட்டார்கள் என்று நான் சொல்லவில்லை! ஏனென்றால் காதலென்பது அவர்களின் இரு கண்களிலே ஒருகண்! அழகைஅசட்டை செய்பவர்கள் அல்லர், ரசிப்பவர்கள்! ஆனால் அதே நேரத்தில் முக்கியமான ஒரு செய்தியையும் நினைவில் வைததுக்கொள்ளவேண்டும்! அவர்கள் வீரர்கள்! சுத்த வீரர்கள்! ஆகவே பஞ்சணைக் கிளியை அனுப்பி, தேவர்கள் பருகிவிட்டார்

கள் அமிர்தத்தை என்பதைக் கண்டு, ஏமாந்தோமே என்று வெட்கப்பட்டுத் தலைகுனிந்து நின்றுவிடமாட்டார்கள்! மோசம் போனோமே என்று வருந்தி கோழைகளாகத் திரும்பிவிடமாட்டார்கள்.

"தோள் வலிமையில்லாத தேவர்களே, எங்கே அமிர்தம்? குடித்துவிட்டோமே என்ற ஆணவத்தில் ஆகாயத்தைப் பார்த்துச் சிரிக்கிறீர்களா—சிரியுங்கள்! எங்களது கலாரசனையை ரசிகத் தன்மையை, ஏமாளித்தனம் என்று எண்ணிச் சிரிக்கிறீர்களா—நன்றாகச் சிரியுங்கள்! அமிர்தத்தை மண்ணில் கொட்டிவிடவில்லையே—வயிற்றில் தானே ஊற்றியிருக்கிறீர்கள்! இதோ, அந்த வயிற்றைக் கிழிக்கிறோம்! அமிர்தம் கிடைத்துவிடுமா அதனால் என்று கேட்கிறீர்களா? கிடைக்கவேண்டாம்-எங்களை ஏமாற்றியவர்கள் கீழே விழுந்தால் போதும் பிணங்களாக!" என்று வாளால் தேவர்களின் வயிற்றைக் கிழித்துப்போடுவார்கள்! அந்தக்கால அசுரர்களுக்கும், இந்தகால அசுரர்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை இதுதான்! ஆனால் தேவர்கள் அந்தககாலமாகவே இந்தக்காலத்தையும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்! ஒரு பொன்னையாவை, ஒரு சோலையப்பனை வேண்டுமானால் பலி கொடுத்துவிடலாம்! ஆனால் அடுத்து புற்றீசல் எனப் புறப்படப்போகும் பொன்னையாக்களையும் சோலையப்பன்களையும் அவர்களால் அடக்கமுடியாது-அழிக்கமுடியாது! பாவம், அவர்களின் முடிவு மிகவும் பயங்கரமாக இருக்கப்போகிறது! தேவர்களுக்கே அககதி என்றால், மோகினிகளைப் பற்றிச் சொல்லவேண்டுமா?"

,அத்தான், நான் பழைய செந்தாரை அல்லள்-புதிய செந்தாமரை காதலரைக் காராகிருத்தில் சேர்த்துவிட்டுக் கண்ணீர்விடும் செந்தாமரை வாழ்வதா சாவதா என்ற முடிவு தெரியாமல் ஏங்கித் தவிக்கும் அபலை நான்! கள்ள எண்ணத்தோடுதான் உம்மைப் பின்தொடர்ந்தேன்! துரோகி நான்—இல்லை என்று மறுக்கவில்லை! அந்தத்துரோகிதங்கள் கைபட்டுத்தூயவளாகிவிட்டாள்! நிலா முற்றத்தில் நாம் சந்திப்பதற்கு முனபு, அன்று காலை தூமகேதுவிடம், ஆற்றங்கரையில் தாங்கள் சொல்லியதைச் சொல்லிவிட்டேன்! மேலும் இரகசியங்களை அறியத்தான், இரவில் சந்திக்க நான் இசைந்தேன்! ஆனால் நடந்தது என்ன? தாங்கள் அணைத்தபோது திமிறினேன் — திட்டினேன்—கன்னத்தில் கூட அடித்தேன்! எதனால்? என் கன்னித் தன்மை கெடக் கூடாதே-கெடவிடக் கூடாதே—என்ற உறுதியாலும் பயத்தினாலுமே. அப்படியெல்லாம் செய்தேன்! என் கன்னித் தன்மை நிலைத்ததா? நிலைக்கவிட்டீரா? அல்லது நிலை கெடாமலிருக்க வேண்டும் என்ற உறுதிதான், தளராமலிருந்ததா என்னிடம்? வாலிப மயக்கத்தில் பருவக் கொந்தளிப்பில், நாம் விழுந்துவிட்டோம்! மஞ்



சம் எனக்கு மணாளரைத் தந்தது! அந்தக் கணவருக்கு இனியும் நான் துரோகம் செய்ய முடியுமா? தாங்கள் சென்றுவிட்டதும், காலையில் தூமகேதுவிடம் சொல்லியது நினைவிற்கு வந்தது! வருந்தினேன், புலம்பினேன் — நானே எனக்கு அழிவைத் தேடிக் கொண்டேனே என்று தலையில் அடித்துக்கொண்டேன்! மறுநாள் காலை சிதாரியை அனுப்பினேன் அந்தக் குகைக்கு-உண்மையைச் சொல்லி, உம்மைத் தூமகேதுவிடம் சிக்காமல் காப்பாற்ற! ஆனால் அவள் அங்கு வந்தபோது, தூமகேதுவும் அவனது ஆட்களும் குகையினுள் நுழைந்து கொண்டிருந்தார்களாம்! சிறையில் சிக்கிவிட்டீர் என்பதை அறிந்ததும், அத்தான், நான் எவ்வளவு அழுதேன் தெரியுமா! தங்கள் முகத்தை ஒருமுறை பார்க்கவேண்டும் என்ற துடிப்பால்தான், தூமகேதுவின் பக்கத்தில் பழைய நடிப்போடே வந்து நான் நின்றதும், ஆணவத்தோடு தங்களிடம் பேசியதும்......"

இவ்வாறு அவள் உருக்கமான குரலில் தன் உள்ளத்திலுள்ளதைச் சொல்லிக்கொண்டு போன நேரத்தில், நாசகாலி இன்னமும் ஏய்க்க நடிக்கிறாள் என்ற எண்ணம், அவனது ஆத்திரத்தை உச்ச நிலைக்குக் கொண்டுபோய் விட்டது!

"போதும் இனியும் இங்கே நீ இருந்தால், என்ன செய்வேன் என்பதே எனக்குத் தெரியாது! சண்டாளியே, போ வெளியே!' என்று பற்களைக் கடித்துக்கொண்டே கூறி, அவளைச் சுட்டுப் பொசுக்கி விடுபவனைப்போல முறைத்துப் பார்த்தான்.

"அத்தான் ஆத்திரத்தால் யோசிக்காமல், என் வாழ்வைப் பாழாக்கிவிடாதீர்கள்!"

"பாழாக்கிவிட்டாயே என் வாழ்வை—பாதகியே, இன்னமுமா பசப்பு மொழியில் வெற்றி காணமுடியும் என்று நினைக்கிறாய்? போ வெளியே!" என்று அவளது கூந்தலைப் பிடித்திழுத்து, அந்தஅறைக்கு வெளியே கொண்டுபோய்த் தள்ளினான்.

"அத்தான்! அத்தான்"

அவள் கதறினாள். அந்தக் கதறல் காதில் விழுந்து கொண்டிருக்கும் போதே, அவள் போட்டுவிட்டுப் போன ரோஜா மலரைக் காலால் அழுத்தித் தேய்த்து உருத் தெரியாமல் செய்தான்.

சிறைக்கு வெளியே தள்ளாடிக் கொண்டே அலங்கோலமாக வந்த செந்தாமரையை நோக்கி, தோழி சிதாரி ஓடிவந்து, 'என்னம்மா சொன்னார்?' என்று ஆவலோடு கேட்டாள்.

"சொன்னாரடி, என்னைத் தற்கொலை செய்துகொள்ளும்படி!" என்று நிதானமான குரலில் கூறிவிட்டு, இருட்டிலே தோழியின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள். அவள் தலை சுற்றியது. வெட்டுண்ட மரம்போல, அப்படியே சுயநினைவற்றுத் தரையில் விழுந்துவிட்டாள்.

"தற்கொலை! தற்கொலை! அதைத் தவிர எனக்கு வேறு மார்க்கமே கிடையாது!" என்று செந்தாமரை அடிக்கடி பைத்தியம் பிடித்தவளைப் போல சொல்ல ஆரம்பித்துவிட்டாள்.

அவளுக்கு இந்த உலகமே மிகவும் பயங்கரமாகத் தோன்றியது! மரஞ் செடி கொடிகள் கிளி, குயில் குருவிகள்கூட அவள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தயாராக இருப்

பதாக நினைத்தாள். 'இனியும் ஏன் நான் வாழவேண்டும்?' என்ற கேள்வி அவள் மனதில் உயர எழுந்து நின்று, உயிரை மாய்த்துக் கொள்ளத் தூண்டியது.

கடைசியில் சிதாரி சொன்ன வழியையும் கொஞ்சம் பார்ப்போமே என்ற அரைகுறை மனத்தோடு, ஒரு வாரத்திற்குப் பிறகு ஓர் இரவு மாரிமுத்துவின் வீட்டிற்குத் தோழியோடு சென்றாள்.

"செந்தாமரையா, வாம்மா வா! என்று மரியாதையோடு மாரிமுத்து வரவேற்று ஒரு கயிற்றுக் கட்டிலைக் காட்டினான் உட்காரும்படி!

"நீங்கள் உட்காருங்கள் மாரிமுத்து! எனக்கு இதே போதும்!" என்று கட்டிலுக் கருகே தரையில் அவள் அமர்ந்தாள்.

"எப்பொழுதுமே என் வீட்டிற்கு வராதவள், இரவு நேரத்திலே வந்திருக்கிறாளே — ஏன்? தோழியின் கையில் மல்லிகை மாலை இருக்கிறதே, அது எதற்கு? சாதாரண ஆடையோடு அலங்காரம் கொஞ்சமுமில்லாமல், கண்களில் நீர் வழிய செந்தாமரை வந்திருக்கிறாளே! இதெல்லாம் என்ன நடிப்பு?" என்று ஒன்றும் புரியாமல் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்த மாரிமுத்து, ஏக்கத்தின் உருவமாய் இருந்த செந்தாமரையையும், அவளது தோழி சிதாரியையும் மாறி மாறிப் பார்த்தான்! **(வளரும்.)**

---

**2-ம் பக்கத் தொடர்ச்சி**

**15. காமராஜருடன் ரஷியா சென்றுள்ள அமைச்சர் வெங்கடராமன்பற்றி ஒரு தகவலும் காணோமே, ஏன்?**

வேடிக்கையாக இருக்கிறதே உமது கேள்வி? அடுத்த கேள்வியாக காமராஜர் எடுத்துச்சென்ற பெட்டி படுக்கைபற்றிய தகவலே காணோமே என்று கேட்பீர்போல இருக்கிறதே!

**16. காமராஜர் ரஷியா போயிருப்பதுபற்றி பக்தவத்சலனார் என்ன எண்ணிக்கொள்வார்?**

நாமும்தான் போயிருந்தோம் ரஷியாவுக்கு. காமராஜருக்குக் கிடைப்பதுபோன்ற வெளிச்சம் நமக்குக் கிடைக்கவில்லையே என்று கவலைப்படக்கூடும்.

**17. காங்கிரசாட்சி, பணத்தைக் கண்மண் தெரியாமல் செலவழித்திருக்கிறது என்று குறைகூறுகிறீர்களே, அப்படி என்ன செய்துவிட்டது?**

உள்ள பணத்தைப் போட்டு வெள்ளித்தட்டு வாங்கிவிட்டு, மறுவேளை சாப்பாட்டுக்குக் கடன் வாங்கச் செல்பவனைப் போல, வரியாகவும் கடனாகவும் பெற்ற பணத்தை ஏழை எளியோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தச் செலவிடாமல், வெளிநாட்டார் கண்டு பிரமிக்கத்தக்க ஆடம்பரமான அடுக்குமாடிக் கட்டடங்களுக்குச் செலவிடலாமா? அந்தப் போக்கைத்தான் கண்டிக்கிறோம். காங்கிரசாட்சி பிரம்மாண்டமான கட்டடங்களுக்காக மட்டும் இதுவரையில் செலவழித்துள்ள தொகை தெரியுமா? 3000 கோடி ரூபாய்!

**18. குற்றம் குறைகளை எடுத்துக் காட்டும்போது, கேட்டுக் கொள்ளத்தானே வேண்டும்?**

நிச்சயமாக; குற்றம் குறைகளை எடுத்துக்காட்டுபவர் அரைவேக்காடாகவோ, அசூசைப் பிண்டமாகவோவேறொருவருக்கு வெண்சாமரம் வீசி வயிறுநிரப்பி வருபவராகவோ இல்லாதிருந்தால்!

**19. ஆச்சாரியார் தி.மு. கழகத்தைப் பாராட்டிப் பேசுவதை ஒருவர் நாக்கில் தேன் தடவுகிறார் என்று கேலி பேசுகிறாரே, ஏன்?**

அவருடைய நாக்கிலே ஏற்பட்டுவிட்ட அரிப்பு காரணமாக இருக்கலாம்; கண்டதை மென்றது காரணமாக இருக்கலாம் நாக்கிலே அரிப்பு ஏற்பட்டதற்கு.

**20. தி.மு. கழகம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை ஒழித்திட பாடுபடுவதைக் குலைக்கும் முயற்சியில், காங்கிரசை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொள்பவர்களிலேயே சிலர் ஈடுபடுவது எப்படி இருக்கிறது?**

மழைத் தொல்லையிலிருந்து விடுபடத் தூக்கணாங்குருவி கூடு கட்டியபோது குரங்கு அந்தக் கூட்டினைப் பிய்த்துப்போட முனைந்த கதைபோல இருக்கிறது.

**21. எவ்வளவு திறமை இருந்தாலும், மனதிலே பொறாமை மூண்டுவிட்டால், அவனால் நல்ல காரியம் எதையும் செய்யமுடியாதாமே; உண்மையா?**

ஆமாம்! சிரங்கு பிடித்துக் கொள்பவன் ஓவியம் தீட்ட முடிகிறதா? குதிரை போட எண்ணுவான், கழுதையாகத்தான் படம் ஆகிவிடும்.

**22. தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து போய்விட்டவர்களைப் பற்றி நினைக்கும்போது, உங்களுக்கு எப்படி இருக்கிறது?**

சிலரைப்பற்றி நினைக்கும் போது, நேற்று பூசிக்கொண்ட சந்தனத்தின் நினைவு வருகிறது; சிலரைப்பற்றி நினைக்கும்போது ஒட்டிக்கொண்ட சாணத்தைக் கழுவி காலைச் சுத்தப்படுத்திக் கொண்ட நினைவு வருகிறது.

**23. ஆசைக்கும் பேராசைக்கும் என்ன வித்தியாசம்?**

விதைத்தது முளைக்கவேண்டும் என்பது உழவன் ஆசை; விளைந்ததை அடாவடி செய்து அறுத்தெடுத்துக்கொள்ள முனைபவன் கொள்வது பேராசை.

**24. ரஷியா போயிருந்தாரே பக்தவத்சலனார் என்ன அதிசயத்தைக் கண்டதாக வந்து கூறினார்?**

நான் அறிந்த வரையில் அவர் ஒரே ஒரு அதிசயம்தான் கண்டதாகத் தெரிகிறது. ரஷியாவிலே ஒட்டகப் பால் கொடுத்தார்களாம், பருக! வேண்டாம் என்று கூறிவிட்டாராம்!!

**விற்பனையாளர்களுக்கு**

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூலை மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'

# இதுதான் தத்துவம்!

காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் உயிரைப் பலிகொடுத்துக் காணப்பட்ட ஒரு உணர்வு தான் தாஷ்கண்ட் உணர்வாகும். அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை அகழ்ந்து அகழ்ந்து ஆராய்வோர், இந்தியா உலகச் சமாதானத்திலும், குறிப்பாக பாகிஸ்தானுடன் நட்புறவோடு வாழ்வதிலும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தாஷ்கண்ட் ஒப்பந்தம் ஒருதலையானது அல்ல; இரண்டு கரங்கள் தட்டப்பாலே ஓசை எழும் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இந்தியா — பாகிஸ்தான் இணைந்து—அதிலும் ரஷ்ய வல்லரசின் முன்னிலையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம்.

ஒப்பந்த ஷரத்துகள் வெளியிடப்பட்டபோது குள்ளநரிக் குணம் கொண்ட சில நாடுகள் தவிர்த்து பிற எல்லா உலக நாடுகளுமே வரவேற்று — உலக சமாதானத்தில் தங்கள் தங்கள் நல்லெண்ணத்தை வெளிக்காட்டிக் கொண்டன.

பேச்சு வார்த்தைகள் மூலம் எத்தனைப் பெரிய சிக்கலையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு தாஷ்கண்ட் ஒப்பந்தம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றுகூட பல நாட்டு இதழ்கள் எழுதிக் காட்டின.

## செல்லப் பெயர்

**அந்த ஒப்பந்தம், உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டிய ஒரே ஒரு காரணத்தால்தான் 'தாஷ்கண்ட் உணர்வு' என்ற செல்லப் பெயரைக் கூடப் பெற்றது.**

இப்போது எட்டுத் திங்கள்கள் கூட முற்றுப் பெறவில்லை. அயூப் அரசில் மட்டுமல்ல—இந்திய அரசில் கூட பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் பாக்-இந்திய ஒப்பந்த உணர்வுக்கு எந்த வகையிலும் ஊறு தேடிவிடவில்லை. மாறாக மேலும் மேலும் நல்லுணர்வு கொள்ளவே தூண்டிவந்துள்ளது.

ஆனால் பாகிஸ்தானைப் பொறுத்த அளவில், 'ஒப்பந்தம்' என்ற ஒன்றை கோசிஜின் முன்னிலையில் ஏற்படுத்திக்கொண்டோம் என்றோ அந்த உணர்வு உலகத்து நாடுகள் அனைத்தாலும் வரவேற்கப்பட்டது மட்டுமல்லாமல், வாழ்த்துப் பெறவும்கூட பயன்பட்டுள்ளது என்றோ மறந்துவிட்ட தன்மையில் செயல்படுவதாகத்தான் தெரிகிறது.

கடந்த எட்டு மாத காலத்தில் மட்டும் ஒப்பந்த விதிகளை மீறி நூற்றுக்கும் அதிகமான முறை, எல்லைகளில் ஊடுருவல் செய்து தொல்லைகள் தந்துள்ளது பாகிஸ்தான்.

## அணுகுண்டு தா!

உண்மைகள் இவ்வாறு இருக்க, கடந்த கிழமை, பாகிஸ்தான் பிரதிநிதி ஐ. நா. பொதுக் காரியதரிசி ஊதாண்டுக்கு அனுப்பிய ஒரு குறிப்பில், இந்தியா அணுகுண்டுத் தயாரிப்பி லீடுபட்டிருப்பதாகவும், பூமிக்கடியில் வெடித்துச் சோதனை செய்யப் போவதாகவும் குறிப்பிட்டிருப்பதுடன், **தான் ஏன் தன் நாட்டுப் பாதுகாப்புக்குப் பிற நாடுகளிடமிருந்து அணுகுண்டுகளைப் பெற முயலக்கூடாது?** என்றும் கேட்டுள்ளதாம்!

இதே வேளையில்தான் இந்தியா அயூப் அரசுக்கு ஒப்பந்தத்தின் பிற விதிகளைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் அதிகாரிகள் மட்டத்தில்கூட பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டும் உள்ளன. எனினும் இப்போது அதிபர் அயூப்கான் **'காஷ்மீர் பற்றிய பேச்சு இல்லையானால், பேச்சு வார்த்தையில் பயன் காண முடியாது'** என்று இந்திய அரசுக்குப் பதில் அனுப்பி இருக்கிறார்.

**உலக அரங்கில்**

தன் நாட்டுப் பாதுகாப்புக்குத் தான் ஏன் அணுகுண்டு பெற்றுக் கொள்ளக்கூடாது என்ற வினாவையும், காஷ்மீர் பற்றிய பேச்சில்லையானால் பயன் இல்லை என்பதனையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசியல் பார்வையாளர்கள் புதியதொரு உணர்வு பெற முடியும்.

தாஷ்கண்ட் உணர்வை பாக். மதிக்கிறதா? செயல்படுத்த விழைகிறதா? என்ற வினாவையும் தங்களுக்குத் தாங்களே அவர்கள் எழுப்பிக்கொள்ள முடியும்.

ஒன்பது மாதங்களுக்கு முன் அமெரிக்க அரசு இந்தியாவைப் பார்த்து ஒரு வினா விடுத்தது. 'அமெரிக்க உதவியைப் பெற்றுக் கொண்டு இந்தியா — பாக். இரு நாடுகளும் தத்தம் சுயவலிமையைப் பெருக்கிக் கொள்கிறதா? அல்லது போர்க் காரியங்களில் அவ்வுதவியைப் பயன்படுத்துகிறதா? என்று.

## அறையில் நடந்தது?

கடந்த கிழமை நடைபெற்ற அமெரிக்க செனட் கூட்டத்தில் சில இரகசியங்கள் அம்பலமாகியுள்ளன.

ரூ. 1000 கோடிக்கும் அதிகமான அளவுக்கு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்கியுள்ளதாகவும், இது இரகசியமாக —அல்லது பிற நாடுகள் மூலம் அனுப்பப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் அமெரிக்கத் தூதர் **கால்பிரெய்த்** என்பவர், அதே செனட் கூட்டத்தில்,

> "பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகள் ஏதும் செய்யவில்லையெனில், அது காஷ்மீர் பிரச்சினையை இராணுவ பலத்தின்மூலம் தீர்த்துக்கொள்ள நினைக்காது"

என்று கூறியிருக்கிறார். இக்கருத்தை மிகப் பெரும்பான்மையான செனட் உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றுள்ளனர்.

## கூட்டிப் பார்த்தால்

இதிலிருந்து பெறப்படுவது, செனட் மன்றம், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்

முகப்பில் :
**சிவகெங்கையில் நடைபெற்ற கழக மாநாட்டின் ஊர்வலக் காட்சியும், அழகுமிகு நுழைவு வாயிலும்.**

வதைப் பெரிதும் விரும்பவில்லையென்றும், ஆனால் அதிபர் ஜான்சன் இதற்கு மாருக எண்ணங்கொண்டிருப்பதுடன், ரூ. 1000-கோடி (சுமார் 200-கோடி டாலர்)க்கு இரகசியமாகவும், பிறநாடுகள் வாயிலாகவும் ஆயுதங்களை அனுப்பிக்கொண்டிருக்கிருர் என்பதல்லவா!

இப்போது நினைத்துப் பாருங்கள்:

பிற நாடுகளிலிருந்து அணுகுண்டு வாங்குவது.

அமெரிக்கா இரகசியமாக ஆயுதம் வழங்கிக்கொண்டிருப்பது.

பேச்சுவார்த்தையில் பயனில்லை என்பது.

இவைகள் எதனைக் குறிக்கின்றன?

சீனவுடன் அதிகமாகக் குலவிக்கொண்டிருக்கிருர் புட்டோ என்ற ஒரே காரணத்தால்தான், அமெரிக்கா அவரைத்'தொலைத்துக்கட்ட' ஆலோசனை வழங்கியது என்ற வதந்தியையும், புட்டோ இனிப் பதவிக்குத் திரும்பமாட்டார் என்ற உண்மையையும், அவர் கெய்ரோவில் உணவு விடுதி ஒன்றில் இரகசியமாகத் தங்கி இருக்கிருர் என்பதையும் — அமெரிக்கா இரகசியமாக ஆயுத உதவி அளித்திருக்கிறது என்பதனையும் இணைத்துப் பார்க்கிறவர்களால் —பாகிஸ்தான், தாஷ்கண்ட் உணர்வை மதிக்கும் போக்கில் இல்லை; அது மற்ருெரு அணு ஆயுதப் போக்குக்குத் தன்னைத் தயார் செய்துகொள்கிறது என்பதும், நம்பப்படாமல் போய்விடுமா என்ன?

சீனவுடன் உள்ள நெருக்கத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; தன்னை ஒரு நல்ல நண்பனுக தெரிந்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக அமெரிக்கா பாகிஸ்தானுக்கு என்னென்ன யோசனைகள் வழங்கினுலும், எத்தகைய உதவிகள் செய்தாலும், அது இந்தியத் துணைக்கண்டத்தை எந்த அளவுக்கு நிர்பந்தத்திலும், அச்சநிலையிலும் இருக்க ஆளாக்கிவிடுகிறது என்பது அமெரிக்காவுக்குப் புரியவில்லையா?

## உள்ளம்தான் என்ன?

அல்லது புரிந்தும், வேண்டுமென்றே அவ்வாறு செயல்படுகிறதா? **எதிரிக்கு எதிரி நண்பன்** என்ற கொள்கையா? அப்படியானல் யார் எதிரி? யார் நண்பன்?

பதில் சொல்லவேண்டிய கடமை அமெக்காவுக்கு உண்டு; எனினும், இந்திய அரசின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், அமெரிக்கா பதிலும் சொல்லாது—இந்தியாவும் கேட்காது.

இந்திய மக்கள் மட்டும் தெளிவாகப் புரிந்துகொண்டாக வேண்டும். இந்தியாவை அமெரிக்கா கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறது என்பதனை. இதற்கான காரணங்களை விளக்கவேண்டிய அவசியமே இல்லை. ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பும், உரபேர ஒப்பந்தம் போன்றவைகளுமே சான்றுகளாக எதிரே இருக்கின்ற வரையில்!

இந்திய—அமெரிக்க கூட்டு நிறுவன யோசனையைத் தற்காலிகமாகத் தள்ளிவைத்திருக்கிருர்களாம்; கூறப்படும் காரணம் எதுவானுலும், அந்த நிறுவனத் திட்டம், அமெரிக்க மோசடியைப் பச்சையாக அம்பலப்படுத்துவது என்பது தெற்றெனத் தெரிவதால் தான் என்பதுமட்டும் உண்மை!

இப்படிப்பட்ட முறைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தியா அமெரிக்காவைத் தட்டிக் கேட்காது-பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்யலாமா என்று! பாவம் இந்தியா! ஆனுலும் அமெரிக்கச் செனட்டர்கள்கேட்டிருக்கிருர்கள்!

இந்தியா-பாக். போரைக் காரணம் காட்டி இரு நாடுகளுக்குமே ஒப்பந்தப்படி உள்ள சில உதவிகளை நிறுத்திய அமெரிக்காவுக்கு—இப்போது பாகிஸ்தானுக்கு மட்டும் ஆயுதங்கள் வழங்க-பிற நாடுகள் மூலம்கூட — உரிமையுண்டு! அது அமெரிக்க ஜனநாயகம்!!

இந்திய ஜனநாயகத்தால் இதனைக் கேட்க முடியாது!

## இதுதான் காரணமா?

பாகிஸ்தான் மற்ருெருபோருக்கு —அணுஆயுதப் போருக்கு—அமெரிக்கப் பின்னணியுடனும் சீன உதவியுடனும் — தன்னைத் தயார் செய்துகொண்டு வருகிறது. இதனுலேயே பேச்சுவார்த்தைகளைப் பாகிஸ்தான் விருப்பவில்லை — ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும்—தாஷ்கண்ட் உணர்வை — அதனுல் அதிக லாபமடைந்த பாகிஸ்தான் தான் மதிக்கவில்லை என்பதையும், உலக நாடுகளின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டியது இந்தியாவுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்குக் கடன் கொடுத்துள்ள சிறிய, பெரிய நாடுகளின் நலனுக்குக்கூட நன்மை பயக்கும் என்பது கவனிக்கத்தக்கதாகும்!

சின்னஞ்சிறு குழந்தை உதைத்தால்தான் அந்த உதைத்தக் காலுக்கு முத்தம்தர முடியும்; மாருக உதைப்பது விவரம் தெரிந்த ஒருவன் என்ருல்? — என்பதுதான் தத்துவம்.

—சீயேயெம்.

### தகுதியில்லை!



ஒரு நோயாளியை, வெகு நேரம் வரையில் பல கோணங்களில்சோதித்தபின்பு, டாக்டர், நோயாளியைப் பார்த்து, "நீங்கள், புகைப்பிடிப்பதையும், மது அருந்துவதையும் உடனே நிறுத்திவிடுங்கள்; சீக்கிரமாகப் படுத்துறங்கி, அதிகாலையிலேயே எழுந்துவிடுங்கள்; இதுதான் உங்களுக்கு முதலில் தேவையான வைத்தியம்" என்ருர்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த நோயாளி சொன்னதாவது:- "உண்மைதான் டாக்டர், ஆனுல் நீங்கள் குறிப்பிட்டபடி இருக்கும் தகுதி எனக்கில்லை; அதனுல் அடுத்த சிறந்த முறையைச் சொல்லுங்கள்"


இப்போது நடைபெறுகிறது
சென்னை காமதேனு, மஹாராஜா, புவனேஸ்வரி, ஜெயராஜ்
மற்றும் தென்னுடெங்கும்
பாலன்
பிக்சர்ஸ்
நாம் மூவர்
கதை
மகேந்திரன் BA.,
வசனம்
முல்லை சக்தி
பாடல்கள்
வாலி
இசை
எஸ்.எம்.எஸ்
ஒளிப்பதிவு
கர்ணன்
டைரக்ஷன்
ஜம்பு
ALL RIGHTS CONTROLLED BY SARADA, ENTERPRISES MADRAS-17.